# வேர் இல்லாத செடிகள்



## தேவபாரதி

-: ஐந்திணைப் பதிப்பகம் :-

# வேர் இல்லாத செடிகள்

தேவபாரதி

ஐந்திணைப் பதிப்பகம்
தொலைபேசி : 841712
15, சைடோஜி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை—600005



தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் குறிப்பிடத் தகுந்த எழுத்தாளரான தேவபாரதி கடந்த கால் நூற்றாண்டுக்கு முன்பிருந்து எழுதத் தொடங்கினாலும், வாழ்க்கையின் அலைக் கழிப்பினால் மிகக் குறைவாகவே எழுதியிருக்கிறார். ந. சுப்பிரமணியன் என்கிற தமது இயற்பெயரை மகாகவி பாரதியாரிடம் கொண்ட ஈடுபாட்டினால் தேவபாரதி என்று மாற்றி வைத்துக் கொண்டார்.

சென்னையைப் பூர்வீகமாகக்கொண்ட நடேச நாயக்கருக்கும், சாரதாம்பாளுக்கும் 1936-ம் வருஷம், செப்டம்பர் மாதம் 4-ந்தேதி இவர் பிறந்தார். தம் இளமைக் காலத்தில் அநேக உடலுழைப்புத் தொழில்களை இவர் செய்திருக்கிறார்.

பாரதியாரைக் குருவாகக் கொண்டு மனித குல நேயத்தையும், சோஷலிச லட்சியத்தையும் தமது இலக்கியத்தின் பணியாக மேற்கொண்டுள்ள இவர் முழு நேர எழுத்தாளராவார்.

இலக்கியச் சிந்தனை என்கிற அமைப்பில் இவரது கதைகளை விமர்சிக்க வந்த திரு. ஆர். வி. யின் வருமாறு இவரைப் புகழ்ந்துரைக்கிறார். ''தேவபாரதியின் லட்சிய நோக்கு லட்சண வரம்புக்கு உட்பட்டே பாய்ந்து செல்கிறது. சமுதாய அநீதிகளையும், புரட்டுக்களையும், சிறுமைகளையும் போகிற போக்கில் சுட்டிக் காட்டிச் சிந்தையில் கொணர்ந்து நிறுத்துகிற பாங்கு, கண்காணிப்பாகக் கதையை நடத்திக் கொண்டு போகிற துப்புரவு, கவனத்தைத் திசை திருப்பிச் சலிக்க வைக்காமல் இருக்கிற கட்டு திட்டம் ஆகியவை இவருடைய எழுத்துக்களின் பொதுத் தன்மை.

இவரது கலை நோக்கில் ஒரு ரசனை இருக்கிறது. மனிதனுடைய அடிப்படை இயல்பில் ஒரு நம்பிக்கை இழைந்தோடுகிறது. எதார்த்த பூர்வமான சூழ்நிலையில் உயிருள்ள பாத்திரங்களையே படைத்து அவர்களைப் பேசவும் இயங்கவும் வைக்கிறார். இவர் படைத்துள்ள பாத்திரங்கள் பேசுவதையும் சொல்வதையும்விட வியங்கியமாகத் தொனிக்கும் குரலும் காட்சியும் இலக்கிய ருசியை ரசமாக வழங்குகின்றன.

இவருடைய தூரிகையில் அமிர்தத்துளி சேர்ந்திருக்கிறது. அது உயிரோட்டம் பாய்ச்சுகிறது.''